2022 ஏப்ரல் 22]

அதை அனுமதித்தேன். இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லை. உட்காருங்கள்.

வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.M. *தமிழ்செல்வம், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

159—

கால்நடை மருத்துவமனை

***12009—திரு. T.M. தமிழ்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை வட்டம், பாவக்கல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எழுதிக் கொடுத்துவிடுங்கள். செய்து தந்துவிடுவார்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை வட்டம், பாவக்கல் ஊராட்சி, பாவக்கல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.M. *தமிழ்செல்வம் அவர்கள்.*

திரு. T.M. தமிழ்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு முன்னாள் முதல்வர், எதிர்க்கட்சித்*

தலைவர், அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் திரு. ஓ.பி. எஸ். அவர்களையும், எங்கள் மாவட்டத்தின் நாயகர், மண்ணின் மைந்தர் உயர்திரு. K.P.M. அண்ணன் அவர்களையும், மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் திரு. அசோக்குமார் அவர்களையும் வணங்குகிறேன்.

ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதியில், ஊத்தங்கரை ஒன்றியத்திற்குட்பட்ட பாவக்கல் ஊராட்சியில் உள்ள பொதுமக்கள் கால்நடை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமானால், 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காட்டேரி கால்நடை மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டும். மேலும், பாவக்கல் ஊராட்சியில் 5,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. எனவே, பாவக்கல் பகுதியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுமாய்த் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிமுறைகளின்படி புதிய கால்நடை மருத்துவமனை நேரடியாக தோற்றுவிக்கப்படுவதில்லை. முதலில் கால்நடைக் கிளை நிலையம் தோற்றுவிக்கப்பட்டு, பின்பு அது கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படுவதற்கு நிலையான கட்டடம் கட்ட, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி, பேரூராட்சி 20 சென்ட் நிலம் அளிக்க வேண்டும்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மேலும், தற்காலிகமாகக் கால்நடை மருந்தகம் இயங்குவதற்கு சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி, பேரூராட்சி, குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு மின்வசதியுடன்கூடிய வாடகையில்லா கட்டடம் அளிக்க வேண்டும். அந்நிலையத்தில் வழங்கப்படும் செயற்கை முறை கருவூட்டல்களின் எண்ணிக்கை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அவ்வாறு தரமுயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகத்தில், நாள்தோறும், சராசரியாக 40 கால்நடைகளுக்குச்

2022 ஏப்ரல் 22]

சிகிச்சை மற்றும் இதர சேவைகளை வழங்கும்பட்சத்தில் அம்மருந்தகம் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்படும். அவ்வாறு தரமுயர்த்தப்பட்ட கால்நடை மருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கான சிகிச்சைப் பிரிவு வசதிகள், மருந்துகள் வைப்பறை, அலுவலக அறை, சிகிச்சை அறை, பணியாளர்களுக்குக் குடியிருப்பு போன்றவற்றிற்குப் போதிய இட வசதிகள் இருக்க வேண்டும். கால்நடைக் கிளை நிலையம் துவக்குவதற்கு அக்கிராமத்தில் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலே கால்நடை அலகுகள் 3,000–க்குமேல் இருத்தல் வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் தேவையின் அடிப்படையில் அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு புதிய கிளை நிலையங்கள் துவக்கி வைக்கப்படுகின்றன.

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை வட்டம், பாவக்கல் ஊராட்சி, பாவக்கல் கிராமத்தில் 5,269 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்க அரசின் செயற்குறிப்பு இடம் பெறும்போது ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை வட்டம், பாவக்கல் ஊராட்சி, பாவக்கல் கிராமத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைகளைப் பெற்று, நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, தக்க நடவடிக்கை எடுத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. T.M. தமிழ்செல்வம் அவர்கள்.*

திரு. T.M. தமிழ்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுப்பட்டி கிராமத்தில் உள்ள கால்நடைக் கிளை மருத்துவமனை செயல்பாட்டில் இல்லாமல் உள்ளது. இந்த மருத்துவமனையைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த மருத்துவமனையை உடனடியாக எங்கள் துறையின் அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, அந்தக் கால்நடைக்*

கிளை நிலையம் செயல்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு கண்டிப்பாக எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

160—

ஆரம்ப சுகாதார நிலையம்

***6908—திரு. M. ராஜமுத்து:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஒன்றியத்தில் மல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரமுயர்த்துவது என்பது அரசின் கொள்கை முடிவாகும். அந்த வகையில், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், பனமரத்துப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, அதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தற்போது தரமுயர்த்த வேண்டிய அளவுக்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து அவர்கள்.

திரு. M. ராஜமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், புரட்சித்